முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை

தமிழ்ச் சமூகத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களை வரலாற்று ரீதியாக நிலைநிறுத்தும்!

சட்டப்பேரவையில் தொல்லியல் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதி!

சென்னை, ஜூலை 9-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமையிலான தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை தமிழ்ச் சமூகத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களை வரலாற்று ரீதியாக நிலைநிறுத்தும் என்று சட்டப்பேரவையில் தொல்லியல்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றுகையில் அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வருமாறு:-

“திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்

விண்ணோடும் உடுக்களோடும்

மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் நம்முடைய மொழி”.

“கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தக் குடி நம்முடைய குடி”.

தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் இந்தக் குடி தோன்றி 15 இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கிறது என்பதை அத்திரம்பாக்கத்திலே நாம் நடத்தியிருக்கக்கூடிய அகழாய்வுகள் நம்மிடத்திலே காட்டுகிறது என்று சொன்னால், தமிழினத்தினுடைய வரலாறு என்பது இலக்கியங்கள் மட்டும் காட்டக்கூடிய அகச் சான்றுகள் அல்ல. அதற்கு திட்டவட்டமான சரித்திர வரலாற்றுச் சான்றுகள் இப்போதும் இருக்கிறது என்பதை தமிழ்நாட்டிலே நாம் மேற்கொண்டு வரக்கூடிய பல அகழாய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

பொருநை நாகரிகம்!

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழர்களுக்கு இருக்கக்கூடிய இந்த நாகரிகம் என்பது, இரும்பின் பயன்பாட்டை அறிந்திருக்கக்கூடிய ஒரு சமுதாயமாக நாம் 4,200 ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்திருக்கிறோம் என்பதை மயிலாடும்பாறையிலே நடைபெற்ற அகழாய்வுகள் தெரிவித்திருக்கிறது.

தென்னிந்தியாவினுடைய நாகரிகத்தினுடைய தொட்டில் என்று அழைக்கக்கூடிய பொருநை நாகரிகத்தின் வாயிலாக வெண்கலத்தைக் குறித்தும், தங்கத்தைக் குறித்தும், இரும்பினுடைய பயன்பாட்டினைக் குறித்தும் மக்கள் அறிந்திருக்கக் கூடிய நாகரிகம் பொருநை நாகரிகம் என்கிற அந்த நாகரிகம் ஏறத்தாழ 3,200 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ் நிலப்பரப்பிலே இருந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே இருந்த அந்த பூர்வகுடிகள் எழுத்தறிவும், கல்வியறிவும் பெற்றிருக்கக்கூடிய ஒரு நகர நாகரிக சமுதாயமாக வாழ்ந்தார்கள் என்பதை ஏறத்தாழ 2,600 ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்றிருக்கக்கூடிய கீழடி நாகரிகம் நமக்கு எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. இந்த வழியிலே தொடர்ச்சியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ரூ.5 கோடி ரூபாயை தமிழ் நாட்டினுடைய வரலாற்றில் முதல் முறையாக அகழாய்வுப் பணிகளுக்காக அளித்து, இந்த ஆண்டும் நம்முடைய தமிழ்நாட்டிலே 8 இடங்களிலே தனது அகழாய்வுகளை மேற்கொள்வதற்கு அனுமதியினை வழங்கியிருக்கிறார்கள்.

அந்த அனுமதியும் பல்வேறு காலக்கட்டங்களிலே நம்முடைய வரலாற்றினுடைய வரிசையை எடுத்துக்கொண்டு, உதாரணத்திற்கு நுண் கற்காலம் microlithicஆக இருக்கக்கூடிய காலத்தை நீங்கள் எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டினுடைய வரலாற்றை வெம்பக்கோட்டை அகழ்வாய்வுகள் மூலமாகவும், அதேபோல் கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, சென்னானூரிலே இருக்கக்கூடிய அந்த அகழ்வாய்வுகள் மூலமாகவும், புதிய கற்கால காலகட்டத்தை அதேபோல், கற்கால காலக்கட்டத்திலே இருந்து இரும்பினுடைய பயன்பாட்டிற்கு அந்த transitionல் நாம் மாறக்கூடிய அந்தக் காலகட்டத்திலே இருக்கக்கூடிய ஆய்வுகள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கீழ்நமண்டியிலே இருக்கக்கூடிய அந்த காலக்கட்டம்.

தொடர் பண்பாட்டு விழுமியங்கள்!

திருமலாபுரம், தென்காசி மாவட்டத்திலே இரும்பு பயன்பாட்டினை அறிந்திருக்கக்கூடிய அந்தக் காலக்கட்டம். கடலூர் மாவட்டம், மருங்கூர்; திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஆகிய இடங்களிலே சங்ககால நாகரிகங்கள் எப்படி இருந்திருக்கிறது என்பதை அறியக்கூடிய அகழ்வாய்வுகள். புதுக்கோட்டை மாவட்டம், பொற்பனைக்கோட்டையிலே அந்தப் பகுதியிலே நிலவியிருக்கக்கூடிய தொடர் பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ளக்கூடிய அகழ்வாய்வுகள் என்று தொடர்ச்சியான அகழ்வாய்வுகள் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதல்களோடு இந்தத் துறை மேற்கொண்டு வருகிறது. தொல்லியல் துறையைப் பொறுத்தமட்டில் அகழ்வாய்வுகள் எவ்வாறு முக்கியமோ அதைப்போல், மிக முக்கியமான இன்னொரு துறை கல்வெட்டியல் துறை.

இந்தியாவிலே மிக அதிகமான அளவிலே கல்வெட்டுகள் இருக்கக்கூடிய ஓர் இடம் தமிழ்நாட்டினுடைய நிலப்பரப்பு. அதிலும் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கல்வெட்டுகளிலே 50 சதவிகிதமான கல்வெட்டுகள் தமிழ்க் கல்வெட்டுகள் என்பது மிகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டினுடைய தொல்லியல் துறை இதுவரை 26,000 கல்வெட்டுகளை படியெடுத்திருக்கிறது. அந்தக் கல்வெட்டுகளில் ஏறத்தாழ 10,197 கல்வெட்டுகள் 67 தொகுதிகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 15 தொகுதிகளிலே ஏறத்தாழ 2,877 கல்வெட்டுக்கள் வெளியிடப்பட்டிருக்கிறது.

ரூ.3.5 கோடியில் தமிழ்நாட்டில் உள்ள கல்வெட்டுகளைப் படித்து, நூலாக வெளிக்கொணரும் சிறப்புத் திட்டம்!

அதிக கல்வெட்டுகள்!

அனைவருடைய விருப்பத்திற்கேற்ப மைசூரிலே இருக்கக்கூடிய அந்த தமிழ்க் கல்வெட்டுகள் அதனுடைய estampagesஐ இங்கே கொண்டுவரக்கூடிய அந்த சீரிய முயற்சிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு அங்கே இருந்து அந்தக் கல்வெட்டுகளை 50 ஆண்டுகால தமிழ் மக்களுடைய கனவை நிறைவேற்றக்கூடிய வகையிலே அதை சென்னைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, தொடர்ச்சியாக நான் குறிப்பிட்டுச் சொல்லி வருவதைபோல் இந்த 2600 ஆண்டுகளை நீங்கள் எடுத்துக்கொண்டால் தொடர்ச்சியாக பேசக்கூடிய ஒரு மொழி, தொடர்ச்சியாக எழுத்து வழக்கத்திலே இருக்கக்கூடிய ஒரு மொழி, தொடர்ச்சியாக இலக்கியங்களைப் படைத்திருக்கக்கூடிய ஒரு மொழி என்கின்ற வகையில் நம்முடைய தமிழ் மொழி செம்மொழி என்கின்ற அந்த தகுதியினைப் பெறுவதற்காக அடிப்படையாக அமைந்திருக்கக்கூடிய தமிழியக் கல்வெட்டுகள், தமிழ் பிராமி கல்வெட்டுக்களை நாம் பாதுகாக்கக்கூடிய முயற்சியிலே இந்தத் தொல்லியல் துறை ஈடுபட்டு இருக்கிறது.

அதன் வாயிலாக 12 தமிழியக் கல்வெட்டுகளை பாதுகாத்து நெகனூர், தொண்டூர், அரிட்டாபட்டி, முதலைக்குளம் ஆகிய தமிழியக் கல்வெட்டுகளும் 2021 முதல் பாதுகாக்கப்பட்டச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல, பாறைக்குளம், புதுப்பட்டி, மூவரைவென்றான், செவல்பட்டி, பதினாலாம் பேரி ஆகிய ஊர்களிலே மலையைக் குடைந்து உருவாக்கிய structural temples வருவதற்கு முன்பாக இருக்கக்கூடிய இந்த cave temples என்று சொல்லக்கூடிய இந்த குடவரைக் கோவில்கள் எல்லாம் பொற்காலப் பாண்டியக் காலத்திலே உருவாக்கியிருக்கக்கூடிய இந்த குடவரைக் கோவில் களைப் பாதுகாக்கப்பட்டு நினைவுச் சின்னமாக அறிவித்திருக்கிறோம்.

புராதனக் கட்டிடங்கள்

அதைப்போல, புராதனக் கட்டடங்கள் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் மராத்தா அரண்மனை, தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை ஆகியவற்றை பழமை மாறாமல் 17 கோடி ரூபாயில் புதுப்பிக்கத்தக்க அந்த முயற்சியும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு அளித்திருக்கிறார்கள். எனவே, உள்ளும் வகையெல்லாம் நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழ்ச் சமூகத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களை நம்முடைய பாரம்பரியப் பெருமையை நாம் வரலாற்று ரீதியாக அறிவியல் பூர்வமாக தொடர்ந்து நாம் நிலைநிறுத்தக்கூடிய இந்தப் பணியினைத் தமிழ்நாடு அரசினுடைய தொல்லியல் துறை முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அதைக் கண்டிப்பாக நிறைவேற்றும்.

பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னங்களைப் பராமரிக்க ஒதுக்கப்பட்ட ரூ.2 கோடி நிதி ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்!

தொல்லியல் துறை அறிவிப்புகள் 2024-2025

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொல் பொருட்களை உள்ளடக்கிய புதிய அருங்காட்சியகம்!

1) தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளிக்கொணரும் சிறப்புத் திட்டம் ரூ. 3. 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, முறையாக படித்து, பதிப்புப் பணிகளை மேற்கொண்டு நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இதுவரை 10,197 கல்வெட்டுகளை 67 தொகுதிகளில் வெளியிட்டுள்ளது. மீதமுள்ள கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளியிடுவதற்கு சிறப்புத் திட்டம் உருவாக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பித்து நூலாக வெளியிடும் ஐந்தாண்டு சிறப்புத் திட்டம் ரூ. 3. 50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

2)புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சின்னங்களை மேம்படுத்தி உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ரூ. 4 கோடியில் மேற்கொள்ளப்படும்.

2022—2023-ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்ட விருதுநகர் மாவட்டத்திலுள்ள புதுப்பட்டி, செவல்பட்டி, மூவரைவென்றான், திருச்சுழி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பதினாலாம்பேரி ஆகிய முற்காலப் பாண்டியர் காலக் குடைவரைகளை மேம்படுத்தி உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ரூ. 4 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

3) மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் புதியதாக மின்னொளியுடன் கூடிய சிற்பக்காட்சிக் கூடம் மற்றும் அடிப்படை வசதிகள் ரூ. 2. 80 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் உள்ள நாடக சாலை, பள்ளியறை மற்றும் திறந்தவெளியில் இருக்கும் சிற்பங்கள் அனைத்தையும் பொதுமக்கள் ஒரே இடத்தில் கண்டுகளிக்கும் வகையில் திருமலை நாயக்கர் அரண்மனை வளாகத்தில் ஒரு புதிய மின்னொளி யுடன் கூடிய சிற்பக்காட்சிக் கூடம் ஏற்படுத்தும் பணி, மழைநீர் வடிகால் மற்றும் நவீன கழிப்பறை ஆகிய அடிப்படை வசதிகள் ரூ. 2. 80 கோடி செலவில் உருவாக்கப்படும்.

4) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மனோரா நினைவுச் சின்னத்தில் உட்கட்டமைப்பு மற்றும் முகப்பு மின் விளக்குகள் ரூ. 2. 75 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சரபேந்திர ராஜபட்டினம் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள மனோரா நினைவுச் சின்னத்திற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் அதன் உட்கட்டமைப்பு மற்றும் முகப்பு மின் விளக்குகள் அமைத்திடும் பணிகள் ரூ. 2. 75 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

5) தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்களைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 2 கோடி நிதியினை ரூ. 3 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

வரலாறு மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த 105 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் 3 தொல்லியல் தளங்கள் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தளங்களாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வோர் ஆண்டும் தொன்மையான வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அரசால் அறிவிக்கப்படும் நிலையில், ஆண்டுதோறும் உயர்ந்து வரும் வரலாற்றுச் சின்னங்களைத் தொல்லியல் நெறிமுறைகளின்படி பாதுகாக்கவும் தொன்மை மாறாமல் பரா மரிக்கவும் பார்வையாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ரூ. 2 கோடி நிதியினை ரூ. 3 கோடியாக உயர்த்தி தொடரும் செலவினமாக வழங்கப்படும்.

6) இராமநாதபுரம் மாவட்டத்தில் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உள்ளடக்கிய புதியதாக அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் தொல்லியல் தளம், வைகை ஆற்றின் கரையில் வங்காளவிரிகுடா கடற்கரையோரம் அமைந்துள்ளது. இத்தளத்தில், தொல்லியல் துறை 10 ஆண்டுகள் விரிவான அகழாய்வு மேற்கொண்டது. இந்த அகழாய்வுகளின் முடிவுகள் உரோம் நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான வணிகத் தொடர்பினை உறுதிசெய்துள்ளன. அழகன்குளத்தில் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உள்ளடக்கிய புதியதாக அருங்காட்சியகம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

7) தொல்லியல் துறையின் அகழ்வைப்பகங்களுக்கான மேம்பாட்டு நிதியினை ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ . 30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 15 அகழ்வைப்பகங்களில் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை அறிஞர்கள், தொல்லியலாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் வந்து ஆய்வு மேற்கொள்ளும் வகையிலும் பார்வையிடும் வகையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அகழ்வைப்பகங்களை மேம்படுத்தும் வகையில் தற்பொழுது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் ரூ. 10 இலட்சம் நிதியினை ரூ. 30 இலட்சமாக உயர்த்தி தொடரும் செலவினமாக வழங்கப்படும்.

8)தொல்லியல் துறையின் 20 சார் அலுவலகங்கள் மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு மடிக்கணினி கேமரா மற்றும் உபகரணங்கள் ரூ. 50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

தொல்லியல் துறை வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல், கல்வெட்டுகளைப் படியெடுத்து நூலாக வெளிக் கொணர்தல், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனுறும் வகையில் அகழ்வைப்பகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் அமைத்தல் போன்ற பணிகளை முதன்மைப் பணிகளாக செய்து வருகின்றது. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள ஏதுவாக காலத்தோடு ஒன்றிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பணியாற்றுவது இன்றியமை யாததாக உள்ளது. எனவே, தொல்லியல் துறையின் 20 சார் அலுவலகங்களுக்கும், இரண்டாம் நிலை அலுவலர்களுக்கும் மடிக் கணினி, கேமரா மற்றும் உபகரணங்கள் ரூ. 50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

9)வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பத்து வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள விராலூர் மற்றும் ஓணம்பாக்கம் சமணச் சிற்பங்களும் கல்வெட்டும், கோயம்புத்தூர் மாவட்டம் திருமலையம்பாளையம் பாறை ஓவியங்கள், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரம், திருப்பூர் மாவட்டம் தாராபுரம் கல் இசை மண்டபம் மற்றும் ஊத்துக்குளி நந்தவனக்கிணறு, இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டை இராஜாராணி மண்டபம், தருமபுரி மாவட்டம் ஆதனூர் கல்வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இராசசிங்கமங்கலம் ஆறுமுகம் கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் பணகுடி கல்மண்டபம் ஆகியவை பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரையாற்றினார்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் படகு சவாரி துவக்க விழா நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம். எல்.ஏ.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஏ. கே.கமல் கிஷோர் படகு சவாரியை துவக்கி வைத்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கட்டிமேடு அ. பக்கீர் முகமது

ஜூலை 9 (2011)

இளமைப் பருவம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியில் பல கிளைக் கழகங்களை உருவாக்கி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.

கிளைக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல பொறுப்புகளை வகித்தவர்.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடன் சிறைக்குச் சென்றவர். தொடர்ந்து மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.